உன்னதரே உம் பாதுகாப்பில் வாழ்கிறேன் - சர்வ
வல்லவரே உம் நிழலில்தான் தங்கியுள்ளேன் -2
புகலிடமே அடைக்கலமே கோட்டையே நம்பிக்கையே

(உன்னதரே)

பாழாக்கும் கொள்ளை நோய் அணுகாது

வேடனின் கண்ணி ஒன்றும் செய்யாது -2

காக்கும் அரண் நீரே என் கேடகமானீரே -2

புகலிடமே அடைக்கலமே கோட்டையே நம்பிக்கையே

(உன்னதரே)

படைத்தவரை புகலிடமாய் கொண்டுள்ளேன்

பரிசுத்தரே பாதுகாக்கும் மதிலானீர் -2

தீங்கு நிகழாது நோயும் அணுகாது -2

புகலிடமே அடைக்கலமே கோட்டையே நம்பிக்கையே

(உன்னதரே)

வழியெல்லாம் காக்கும் தூதன் எனக்குண்டு

பாதம் கல்லில் மோதாமல் தாங்கிடுவார் -2

மிதிப்பேன் சிங்கத்தையே நடப்பேன் சர்ப்பத்தின் மேல் -2

புகலிடமே அடைக்கலமே கோட்டையே நம்பிக்கையே

(உன்னதரே)